# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## பொதுக் கலைமாணித் தேர்வு பகுதி – II 1999/2000 (வெளிவாரி)
## (டிசெம்பர்-2003/ஜனவரி-2004)

## PS 301 ஒப்பீட்டு அரசியல்

LIBR
21
Eastern University

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

01. 1950 களின் பின்னர் ஒப்பீட்டு அரசியல் ஆய்வில் நீர் அவதானிக்கும் பிரதான மாற்றங்களை தெளிவுபடுத்துக.

02. "ஒப்பீட்டு அரசியலினை விளங்கிக்கொள்வதற்கு அணுகுமுறைகள் ஒரு ஊடகமாகும்". இக்கருத்தினை நவீன அணுகுமுறைகளுடன் தொடர்புபடுத்தி ஆராய்க.

03. ஒப்பீட்டு அரசியலில் யாப்பியல்வாதம் (Constitutionalism) வகிக்கும் பங்கினை மதிப்பிடுக.

04. பின்வருவன தொடர்பாகக் கருத்துக் கூறுக.
    I. சமஸ்டி அரசாங்க முறைமை உருவாகத் தேவையான சூழ்நிலைகள்.
    II. ஒற்றையாட்சி முறைமைக்கும், சமஸ்டியாட்சி முறைமைக்கும் இடையிலான வேறுபாடுகள்.

05. "பாராளுமன்ற அரசாங்க முறைமையானது மந்திரிசபை அரசாங்க முறைமை எனவும் அழைக்கப்படுகின்றது". பிரித்தானியாவினை உதாரணமாகக் கொண்டு ஆராய்க.

06. குறைவிருத்தி நாடுகளின் அரசியல் அபிவிருத்தியில் நவகாலனித்துவம் வகித்த பங்கினை மதிப்பிடுக.

07. "அரசியல் முறைமைக்கு ஏற்ப அரசியல் கலாசாரம் வேறுபடுகின்றது." இக்கருத்தினை ஏற்றுக்கொள்கின்றீரா? உதாரணங்களுடன் விளக்குக.

08. அரசியல் நவீனத்துவம் என்ற பதத்தினைத் தெளிவுபடுத்தி, அரசியல் நவீனத்துவத்தினை உருவாக்கும் பிரதான காரணிகளை நுணுக்கமாகப் பரிசீலனை செய்க.

09. அரசியல் சமூகமயவாக்கத்தினை உருவாக்கும் பிரதான நிறுவனங்களை நுணுக்கமாகப் பரிசீலனை செய்க.

10. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

    (அ) நடத்தை வாதம்
    (ஆ) அரசியல் அன்னியமயமாதல்
    (இ) அமுக்கக் குழுக்களும் அதன் போராட்ட உத்திகளும்
    (ஈ) ஒற்றையாட்சி சமஸ்டிவாதம் (Unitarian Federalism)

*******